

இது குறித்து நாம் தர்மபுரி மாவட்ட எஸ்.பி. சுதாகரிடம் பேசினோம்.

“திருமண கோஷ்டியினர் வந்த சரக்கு வண்டி குறித்து விசாரணை செய்து வருகிறோம். அதன் டிரைவர் குடித்து வண்டி ஓட்டியிருப்பது தெரிய வந்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரின் எல்லையிலும் செக்போஸ்ட் அமைத்து சரக்கு வாகனங்களில் ஆட்கள் ஏற்றி வருவது குறித்தும், மது குடித்து வாகனம் ஓட்டுவோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

இது ஒருபுறமிருக்க நிச்சயித்தபடி நித்யா- அருள் ஆகியோரின் திருமணத்தை எப்படியும் நடத்திவிட வேண்டும் என உறவினர்கள் முடிவு செய்தனர். இரண்டு தரப்பிலும் கலந்து பேசி திருமணத்தை செம்மனகள்ளி ஆதிமூல வெங்கடசாமி கோவிலில் நடத்தத் திட்டமிட்டனர். மணநாள் 21.06.2010 அன்று கோவிலில் எந்த வித ஆடம்பரமும் இல்லாமல் சுமார் 25 பேருக்கும் குறை வான அளவிலேயே உறவினர்கள் வந்திருந்தனர். காலை 9.30 மணியளவில் மணமகள் நித்யா கழுத்தில் மணமகன் அருள் தாலி கட்டினார். ஆனாலும் திருமணத்திற்கு வந்தவர்கள் உட்பட யார் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. விபத்தின் சோகத்திலிருந்து இன்னும் மீளவில்லை. மணமக்களும் இதே உணர்வுடன்தான் காணப்பட்டனர்.

நாம் அங்கிருந்த மணமகள் நித்யாவின் மாமாவிடம் பேசினோம்.

“அதிக உறவினர்களை அழைக்கவில்லை. ரத்த சொந்த பந்தங்களை மட்டுமே அழைத்தோம். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் 34 பேரும் ‘அந்தத் திருமணத்தை எப்படியும் நடத்திடுங்கள்’ என தங்கள் வலியையும் மறந்து கேட்டுக் கொண்டனர். இதில் மணமகன் அருளின் பெற்றோர்கள் மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள். விபத்துக்குப் பிறகு திருமல்வாடியில் உறவினர்கள் மணப்பெண்ணை கடுமையாக விமர்சனம் செய்தனர். ‘ஊரையே விழுங்கிவிட்டாள், ராசியில்லாதவள், இனி யார் அவளை திருமணம் செய்து கொள்ள போகிறார்கள்?’ என்று மனசாட்சியே இல்லாமல் பேசினர். ஆனால் மணமகன் அருளும், அவரது பெற்றோரும் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. ‘விபத்துக்கும் மணப்பெண்ணுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை’ என மூட நம்பிக்கையைத் தூக்கி எறிந்துவிட்டுத் தாலி கட்டினார் அருள்” என்று கண்களில் நீர் கசிய நெகிழ்ந்தார்.

இதையடுத்து நம்மிடம் பேசிய மணமகன் அருள், “நடந்த சம்பவங்களுக்கு நித்யா என்ன செய்யும்? நீண்ட நாள் இடைவெளிவிட்டால் மனக் குழப்பம் ஏற்படும் என்பதால் நான்தான் விரைவாக திருமணத்தை நடத்த சொன்னேன். பாவம் ஒரு பெண்ணோட வாழ்க்கை வீணாகிவிடக் கூடாதல்லவா?” என்றார் உருக்கமாக.

நாம் மணமகள் நித்யாவிடம் பேச முற்பட்டோம். ஆனால் அந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தாலே அவருக்குக் கண்கலங்கியது. அவரைத் தேற்றிப் பேச வைத்தோம். “என் வாழ்க்கையில் எல்லாமே அதுவாகவே நடக்கிறது. இதில் என்னத்த நான் சொல்ல...” என்று தேம்பினார் நித்யா. ▼

